தொழில்நுட்பம் மற்றும் இயக்கங்கள் (T & O)

# காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படுதல் கொள்கை

**குறியிலக்கு எல்லை:** டி.பி.எஸ் வங்கி இந்தியா லிமிடெட் (DBIL)

**வெளியிடுநர்:** சவுரப் மிட்டல், தலைவர்- இயக்கங்கள், டி.பி.ஐ.எல்

அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை.
சட்டப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட வெளியீட்டுச் சான்றிதழ் இல்லாமல், டி.பி.எஸ் (DBS) குழுமத்திற்கு வெளியே, இந்த ஆவணத்தின் எந்தவொரு பகுதியும், எந்தவொரு வடிவத்திலும் மீட்டுருவாக்கப்படக் கூடாது.

## 1 வழிகாட்டும் கொள்கை

இந்திய ரிசர்வ் வங்கி காண்க அதன் சுற்றறிக்கை RPCD.CO.RRB.BC.No.100/03.05.33/2013-14 தேதியிட்டது மே 12, 2014 இன் DBOD.BC.Leg.No.113/09.12.001/2002-03 தேதியிட்டது ஜூன் 26, 2003 மற்றும் பத்தி 11.4 (i) கணக்கில் போதிய பண இருப்பு இல்லாத காரணத்தால், நிதியாண்டில் நான்கு நிகழ்வுகளில், காசோலை எழுதிக்கொடுப்பவரின் குறிப்பிட்ட கணக்கில் வரையப்பட்டிருந்த, ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படும் நிகழ்வில், காசோலையைப் பயன்படுத்தும் வசதியுள்ள கணக்குகளை இயக்குவதற்கு, புத்தம் புதிய காசோலைப் புத்தகம் எதுவும் வழங்கப்பட்டு இருந்திருக்காது என்கிற ஒரு நிபந்தனையை அறிமுகப்படுத்துமாறு வங்கிகளை அறிவுறுத்தியது. மேலும், வங்கி தன் விருப்பப்படி தீர்மானிக்கும் உரிமையின் பேரில் நடப்புக் கணக்கை மூடுவது குறித்து ஆழ்ந்து ஆராயலாம்.

தற்போது, இந்திய ரிசர்வ் வங்கி காண்க அதன் சுற்றறிக்கை எண்.DBR.No.Leg.BC.3/09.07.005/2016-17 தேதியிட்ட ஆகஸ்ட் 04, 2016, கணக்கு வைத்திருப்பவரால், காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கப்படுவதன் காரணமாக, வங்கிகள் எடுக்க வேண்டிய எதிர் செய்கையை, வங்கிகள் தம் விருப்பப்படி தீர்மானித்து கொள்ளுமாறு விட்டுவிட முடிவு செய்துள்ளனர்.
அது தொடர்பாக, டி.பி.எஸ் வங்கி இந்தியா லிமிடெட் (டி.பி.ஐ.எல்) காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படுதல் கொள்கையை, கீழே உள்ளவாறு வரைந்துள்ளது.

## 2 கொள்கை

**காசோலைக்கு அடிக்கடி மதிப்பு மறுக்கப்படும் நிகழ்வுகளில் நடவடிக்கை எடுத்தல்**

i. காசோலைப் புத்தகத்தை வழங்கும் நேரத்தில், வாடிக்கையாளர்கள் பணம் செலுத்துவதற்கான தங்கள் ஈடுபாட்டுறுதியை மதிக்கும் வகையில், கணக்கில் போதிய பண இருப்பு பராமரிக்கப்படுவதை உறுதி செய்வது அவர்களின் பொறுப்பு என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும்.

ii. தற்போதுள்ள கணக்குகளை இயக்குவது தொடர்பாக, கீழே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை அறிமுகப்படுத்தும் நோக்கங்களுக்காக, வங்கி புதிய காசோலைப் புத்தகத்தை வழங்கும் நேரத்தில், புதிய நிபந்தனையின் கூறுகளைப் பற்றி அறிவுறுத்தும் கடிதத்தை வழங்கலாம். இது, வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் காசோலைப் புத்தகத்தின் 1வது பக்கத்திலும், காசோலைப் புத்தகத்தின் உடனிணைக்கப்பட்டுள்ள வேண்டுகோள் சீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

iii. நிதியாண்டில், காசோலை எழுதிக்கொடுப்பவரின் குறிப்பிட்ட கணக்கில், ஐந்தாவது முறையாக காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்டால், வங்கியானது, *வாடிக்கையாளர்களுக்கு காசோலைகளை வழங்குவதற்கு முன், மேற்கூறிய நிபந்தனைக்கு அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், சம்பந்தப்பட்ட கூறுக்கு* எச்சரிக்கும் அறிவுரையை வழங்கலாம்.

iv. வாடிக்கையாளர்களிடம் நிதி ஒழுக்கத்தை ஏற்கும்படி செய்யும் நோக்கில், காசோலையைப் பயன்படுத்தும் வசதியுள்ள கணக்குகளை இயக்குவதற்கு, காசோலை எழுதிக்கொடுப்பவரின் குறிப்பிட்ட கணக்கில் வரையப்பட்டிருந்த காசோலைக்கு, கணக்கில் போதிய பண இருப்பு இல்லாத காரணத்தால், ஓராண்டில் **ஆறு நிகழ்வுகளில்**, மதிப்பு மறுக்கப்படும் நிகழ்வில், வங்கியானது, காசோலைப் புத்தகத்தைப் பயன்படுத்தும் வசதியைப் பெறுவதில் இருந்து, வாடிக்கையாளரின் உரிமையைப் பறித்து இருந்திருக்கும் என்கிற ஒரு நிபந்தனையை வங்கி அறிமுகப்படுத்த வேண்டும்.

மேலும், கணக்கு மறுசீராய்வு செய்யப்பட்டு, உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும். இயக்கக் குழு, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தரவுகளை அனைத்து கிளைகளிலும் கண்காணிக்கும், ஒரு நிதியாண்டில் குறிப்பிட்ட கணக்கில் போதிய பண இருப்பு இல்லாத காரணத்தால், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில், வாடிக்கையாளருக்கு உடனிணைக்கப்பட்ட பின்னிணைப்புகளின்படி கடிதங்களை அனுப்ப வேண்டும்.

v. பொருத்தமானதாகக் கருதப்பட்டால், வங்கி 15 நாட்களுக்கு முன் போதிய அறிவிப்பைக் கொடுத்து, கட்டணங்கள் / நிலுவைத்தொகைகள் ஏதாவது இருந்தால் அவற்றை மீட்டு, எஞ்சிய பண இருப்பை பணக்கொடுப்பாணை / வரைவோலை மூலம், வங்கியின் பதிவே◌ட்டில் உள்ள முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்புவதன் மூலம் கணக்கை மூடலாம். வங்கியானது, வாடிக்கையாளர் கடன் வசதிகளைப் பெறும் கணக்குகளில் ***ஒப்பளிப்பு அதிகாரிகளின் / வாடிக்கையாளர் தொடர்புறவு மேலாளரின் (RM)*** அனுமதியுடன் கணக்கை மூடுவதற்கு எண்ணுகிறது எனில், அதே போன்ற எச்சரிக்கும் அறிவுரையை வழங்க வேண்டும்.

vi. மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைகள் அனைத்தும், தீர்வகத்தால் அல்லது காசோலையில் எழுதப்பெற்ற வங்கியால், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட குறிப்பாணையுடன், அதில் "போதிய பண இருப்பு இல்லை" என்று காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்டதற்கான காரணத்தை சுட்டிக்காட்டி, வங்கிக்கு

ஒப்படைக்கப்படுகின்ற காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கப்பட்ட நாளின் அடுத்த பணி நாளில், தொகை பெறுநருக்கு / கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

vii. இந்திய ரூபாய் 1 கோடி மற்றும் அதற்கு மேல் வரையப்பட்ட, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலை ஒவ்வொன்றுக்கும் தொடர்பான தரவுகளும், பங்கு மாற்றங்கள் பெயரில் எந்தவொரு தொகையும் வரையப்பட்ட, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பான தரவுகளும், ஒவ்வொரு நிதிக் காலாண்டுக்கும், தரப்பின் பெயர், காசோலையின் தொகை, காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட காரணம், வழங்கப்பட்ட வசதி, காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட நிகழ்வுகள் போன்ற விவரங்களுடன் காலாண்டு நிலைக்குழு (QSC) முன் வைக்கப்பட வேண்டும்.

## 3 முக்கியப் பொறுப்புகள்

**இயக்கங்கள்**

i. மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைகள் அனைத்தும், தீர்வகத்தால் அல்லது காசோலையில் எழுதப்பெற்ற வங்கியால், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட குறிப்பாணையுடன், அதில் "போதிய பண இருப்பு இல்லை" என்று காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்டதற்கான காரணத்தை சுட்டிக்காட்டி, வங்கிக்கு ஒப்படைக்கப்படுகின்ற காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கப்பட்ட நாளின் அடுத்த பணி நாளில், தொகை பெறுநருக்கு / கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

ii. இயக்கக் குழு, மதிப்பு மறுக்கப்பட்ட காசோலைத் தரவுகளை அனைத்து கிளைகளிலும் கண்காணிக்கும், ஒரு நிதியாண்டில் குறிப்பிட்ட கணக்கில் போதிய பண இருப்பு இல்லாத காரணத்தால், காசோலைக்கு மதிப்பு மறுக்கப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில், வாடிக்கையாளருக்கு உடனிணைக்கப்பட்ட பின்னிணைப்புகளின்படி கடிதங்களை அனுப்ப வேண்டும்.

## 4 ஆட்சிமுறை

### 4.1 உடைமையுரிமை மற்றும் ஏற்பு ஒப்புதலளிக்கும் ஆணையம்

இந்தக் கொள்கையானது, தொழில்நுட்பம் மற்றும் இயக்கங்கள் (T&O) துறைக்கு சொந்தமானது மற்றும் வாரியத்தால் அல்லது பேராளர் குழுவால் ஏற்பு ஒப்புதலளிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாத, ஆனால் தற்செயலான அல்லது நிர்வாக இயல்பில் இருக்கும் எந்தவொரு மாற்றங்களுக்கும், ஏற்பு ஒப்புதலளிக்கும் ஆணையத்தால் ஒப்பமிடப்பட வேண்டியதில்லை.

### 4.2 விலகல்கள்

ஒன்றுமில்லை

### 4.3 மறுசீராய்வு

கொள்கையானது, வேறு வகையில் தேவைப்பட்டாலன்றி, ஆண்டுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் மறுசீராய்வு செய்யப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு 1 அருஞ்சொற்கோவை

பொருந்தாது

## பின்னிணைப்பு 2 தொடர்பான கொள்கைகள் மற்றும் செந்தரங்கள்

காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படுதல் - செயல்முறை குறிப்பு

## பின்னிணைப்பு 3 ஏதேனும் மேலதிக தகவல் அல்லது பொருட்கள்

ஒன்றுமில்லை

## பின்னிணைப்பு 4 விலகல்கள்

| நடைமுறைக்கு வரும் தேதி | பிரிவு | மேற்குறிப்பு எழுதியவர் மற்றும் மேற்குறிப்பு எழுதிய தேதி | ஏற்பு ஒப்புதலளித்தவர் மற்றும் ஏற்பு ஒப்புதல் தேதி | விலகல் விளக்கம் | விலகலுக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## பின்னிணைப்பு 5 பதிப்பு வரலாறு

| பதிப்பு | வெளியீட்டு தேதி | முக்கிய மாற்றங்களின் சுருக்கவுரை |
|---|---|---|
| 1.0 | | கொள்கை வெளியிடப்பட்டது |
| 2.0 | 29-மார்ச்-2017 | இந்திய ரிசர்வ் வங்கி காண்க அதன் சுற்றறிக்கை RPCD.CO.RRB.BC.No.100/03.05.33/2013-14 தேதியிட்டது மே 12, 2014 இன் DBOD.BC.Leg.No.113/09.12.001/2002-03 தேதியிட்டது ஜூன் 26, 2003 மற்றும் பத்தி 11.4 (i) கணக்கில் போதிய பண இருப்பு இல்லாத காரணத்தால் நிதியாண்டில் நான்கு நிகழ்வுகளில் காசோலை எழுதிக்கொடுப்பவரின் குறிப்பிட்ட கணக்கில் வரையப்பட்டிருந்த ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள காசோலைக்கு மதிப்பு மறுக்கப்படும் நிகழ்வில், காசோலையைப் பயன்படுத்தும் வசதியுள்ள கணக்குகளை இயக்குவதற்கு புத்தம் புதிய காசோலைப் புத்தகம் எதுவும் வழங்கப்பட்டு இருந்திருக்காது என்கிற ஒரு நிபந்தனையை அறிமுகப்படுத்துமாறு வங்கிகளை அறிவுறுத்தியது. மேலும், வங்கி தன் விருப்பப்படி தீர்மானிக்கும் உரிமையின் பேரில் நடப்புக் கணக்கை மூடுவது குறித்து ஆழ்ந்து ஆராயலாம்.<br><br>தற்போது, இந்திய ரிசர்வ் வங்கி காண்க அதன் சுற்றறிக்கை எண்.DBR.No.Leg.BC.3/09.07.005/2016-17 தேதியிட்ட ஆகஸ்ட் 04, 2016, கணக்கு வைத்திருப்பவரால், காசோலைகளுக்கு மதிப்பு மறுக்கப்படுவதன் காரணமாக, வங்கிகள் எடுக்க வேண்டிய எதிர் செய்கையை, வங்கிகள் தம் விருப்பப்படி தீர்மானித்து கொள்ளுமாறு விட்டுவிட முடிவு செய்துள்ளனர். |
| 3.0 | 29-ஆகஸ்ட்-2018 | எழுத்து வடிவூட்டங்களில் மாற்றம். |
| 4.0 | 26-ஜூன்-2019 | முதல் வெளியீடு (டி.பி.எஸ் இந்தியா முழுதும் சொந்தமான துணை நிறுவனம் என்ற முறையில் கூட்டுநிறுவனமாக பதிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து). |